1967 ஜூன் 20]

இடத்திலும் இரும்புத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம்' என்ற யோசனையைக் கூறினார்கள். அவ்வளவு பெரியவருடைய யோசனையே புறக்கணிக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதைப் பார்க்கும்போது நம்முடைய கனம் ஆலடி அருணா சொல்லுகின்ற யோசனையும், நான் சொல்லுகின்ற யோசனையும் அவ்வளவு பெரிய இடத்தில் எடுபடுமா என்பதைப்பற்றி ரொம்பத் தயக்கப்படுகிறேன்.

திரு. தோ. மு. நல்லசாமி : இந்தத் திட்டத்திற்கு ஜப்பானிய கொலாபரேஷன் மூலமாக எவ்வளவு தொகை கிடைக்க இருக்கிறது? அந்தத் தொகையும் மத்திய அரசாங்கத்தின் கோரிக்கையின் பேரில், அல்லது முந்தைய மாநில அரசாங்கக் கோரிக்கையின் பேரில் நமக்குக் கிடைக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஜப்பானிய உடன் உழைப்பு (கொலாபரேஷன்) என்பது மத்திய அரசாங்கத்தால் ஒத்துக் கொண்டு ஆரம்பித்திருப்பார்களேயானால் இந்நேரம் அத்திட்டம் செயலில் வந்திருக்கும். அவர்கள் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிற அளவைக் குத்து மதிப்பாகத்தான் சொல்ல முடியும். அந்நியச் செலாவணி எந்த அளவுக்குத் தேவையோ அதை ஜப்பானிய தொழில் அமைப்புக் குழு ஏற்றுக் கொள்வதாக அறிவித்திருக்கிறார்கள். அது கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்கு வரும்.

திரு. ந. தருமலிங்கம் : சேலம் இரும்பாலை பற்றிய போராட்டம் தொடங்கும்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள் அதிலே ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறதா? அவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்திக் கொள்ள அரசாங்கத்திற்கு எண்ணம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : போராட்டம் நடத்தப்படுகிறபோது காங்கிரஸ்காரர்களும் போராட்டத்தில் இருப்பார்கள்—எதிர்த்தரப்பில். (சிரிப்பு)

சிதம்பரத்திலிருந்து அரியலூருக்கு இருப்புப் பாதை

37 வினா—.திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா---

(அ) சிதம்பரத்திலிருந்து காட்டுமன்னார்கோயில், மீஞ்சுருட்டி வழியாக அரியலூர் செல்ல புதிய இரயில் பாதை அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபார்சு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : வெகு நாட்களாகவே இந்தப் பிரச்சினை பொதுமக்களுடைய கவனத்தில் இருந்து வருகிறது. இந்த இருப்புப் பாதை அமைப்பது சம்பந்தமாக இப்போது இருக்கும் அரசாங்கம் என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக நான்கைந்து திட்டங்களைச் சிபாரிசு செய்திருக்கிறது. அவை கவனிக்கப்படக்கூடிய சூழ்நிலைகள் உருவானால் அதோடு தொடர்பாக இதுவும் சிபாரிசு செய்யப்படும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான்கைந்து திட்டங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை என்னென்ன என்று விளக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (1) சென்னை–அரக்கோணம், சென்னை–கும்மிடிப்பூண்டி லைன்களில் மின்சார ரயில்கள் விட ஏற்பாடு செய்தல். (2) சேலத்திலிருந்து கரூர் வழியாக திண்டுக்கல்லுக்கு ‘ பிராட்கேஜ் ’ ரயில் பாதை ஒன்றைப் புதிதாக அமைத்தல். திண்டுக்கல்லில் இருந்து மதுரை வழியாக தூத்துக்குடி செல்லும் ரயில் பாதையை பிராட்கேஜ் ரயில் பாதையாக மாற்றுதல். இதில் மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்குச் செல்லுகிற இணைப்பும் அடங்கும். (3) திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயில் வழியாகத் திருவனந்தபுரத்திற்கு (நாகர்கோயிலிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு கிளைப்பாதையுடன்) புதிய ரயில் பாதை ஒன்றை அமைத்தல். (4) திருச்சிராப்பள்ளிக்கும் விழுப்புரத்திற்கும் இடையில் உள்ள கார்டு லைனை பிராட்கேஜ் லைன் ஆக மாற்றியமைத்தல். விழுப்புரத்திலிருந்து செங்கற்பட்டுக்குக் கூடுதலாக பிராட்கேஜ் லைன் ஒன்றை அமைத்தல். அரக்கோணத்திற்கும் செங்கற்பட்டுக்குமிடையே உள்ள ரயில் பாதையை பிராட்கேஜ் பாதையாக மாற்றியமைத்தல்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ரயில் பாதைகள் சிபாரிசு செய்யப்படும்போது ‘ பிரையாரிடி ’ நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அனைத்தும் ஒரு சீராகத்தான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தத் திட்டங்கள் எப்போது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது பற்றி நான் டெல்லி போயிருந்தபோது ரயில்வே அமைச்சரைச் சந்தித்துப் பேசியிருக்கிறேன். விரைவில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்.

1967 ஜூன் 20]

திரு. ஜே. ஜேம்ஸ் : திருநெல்வேலி--கன்னியாகுமரி பாதை இன்வெஸ்டிகேஷன் முடிந்து இருக்கின்ற காரணத்தால் அதற்குப் பிரையாரிடி கொடுக்க இந்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : திண்டுக்கல்லிலிருந்து பெரிய குளம் தாலுகாவின் கோடியில் உள்ள கூடலூருக்குப் போகக் கூடிய ரயில் பாதை நீண்ட காலமாகப் பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதையும் இதோடு சேர்த்துச் சிபாரிசு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவை பற்றிய முடிவு வந்த வுடன் அங்கத்தினர்கள் சொல்லுகின்ற பாதைகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளலாம்.

திரு. எல். கணேசன் : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர் களே, தஞ்சைக்கும் பட்டுக்கோட்டைக்கும் இடையில் இருப்புப் பாதையை அமைக்கும் திட்டத்தை நான்காவது திட்டத்தில் சேர்க்குமாறு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நான்காவது திட்டத்தில் சர்வே செய்ய வேண்டுமென்று ஏறத்தாழ 11 திட்டங்கள் மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றில் தஞ்சை-பட்டுக்கோட்டை பாதையும் ஒன்று.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : திருநெல்வேலி-நாகர்கோவில் ரயில் பாதையை அமைக்க அங்கே உள்ள காங்கிரஸ் பஸ் முதலாளிகள் இடைஞ்சலாக இருந்தார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படி எதுவும் தகவல் இல்லை.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : இப்போது மந்திரி அவர்கள் அளித்த பதிலில் நான்கு திட்டங்களில் மதுரை, தூத்துக்குடி வழி யாக இணைப்புப் பாதைத் திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். அந்த இணைப்புப் பாதை அருப்புக் கோட்டை வழியாகச் சென்றால் குறுக்குப் பாதையாக இருக்கும். தூத்துக்குடி பெரிய துறைமுக மாக ஆகும்போது அந்தப் பாதை மிகவும் வசதியாக இருக்கும். ஆகையால், அதை மானாமதுரை வழியாகப் போகும்படி அமைப்பார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மூலத் திட்டத்திற்கே பதில் வரவில்லை. கிளைத் திட்டங்களைப் பற்றி பின்பு யோசிக்கலாம்.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, 11 திட்டங்களைச் சர்வே செய்யச் சொல்லியிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார் கள். மன்னார்குடி—பட்டுக்கோட்டை சிறு தூரம்தான் உள்ளது.

18 மைல்கள்தான் உள்ளது. அதற்கு இருப்புப்பாதை போடச் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி—திருத்துறைப் பூண்டி பாதை சர்வே செய்யப்பட வேண்டுமென்றுதான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது சர்வே செய்யப்பட்ட பிறகு மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு இணைப்புப் பாதை போட ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : மத்திய சர்க்காரில் உள்ள ரெயில்வே அமைச்சகம் மாநில அரசின் சிபார்சு மீதுதான் புதுப் பாதைகளை அமைக்குமா? இந்தச் சர்க்காரில் உள்ள ரெயில்வே மந்திரி யார்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு ரெயில்வே மந்திரி இல்லை—போக்குவரத்து மந்திரிதான்.

மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை

* 38 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால் எந்த இடத்தில்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is there any other Fruit Research Farm in any place in the Madras State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் மூன்று இடங்களில் பழ ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. அவை (1) திம்மாவரம், (2) பெரியகுளம், (3) கூனூர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் பழத்தைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

கோழி அபிவிருத்தித் திட்டம்

* 39 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கோழி அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துவிடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை, ஐயா.